Government of India
Viksit Bharat ka Amrit Kaal
Seva, Sushasan, Garib Kalyan ke
11 SAAL
CBC 17101/13/0010/2526
அனைவருக்கும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்தல்
12 கோடி கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன
உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் மூலம் 10 கோடிக்கும் மேற்பட்ட சமையல் அறைகள் புகையிலிருந்து விடுபட்டுள்ளன

### அன்புமணி நீக்கம், பாமக பொதுக்குழு தொடர்பாக

# ராமதாஸ் இன்று முக்கிய அறிவிப்பு

■ சேலம், நெல்லை, ராணிப்பேட்டை நிர்வாகிகள் கூண்டோடு காலி ■ இதுவரை 50க்கும் மேற்பட்டோரை மாற்றி அதிரடி

**திண்டிவனம், ஜூன் 5:** பாமகவில் அடுத்தடுத்து நிர்வாகிகளை அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் நீக்கி அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். அன்புமணி நீக்கம், பாமகபொதுக்குழு தொடர்பாக இன்று பதிலளிப்பதாக ராமதாஸ் கூறியிருந்ததால், இன்றைய செய்தியாளர்கள் சந்திப்பின்போது முக்கிய முடிவுகளை அறிவிப்பார் என பாமக நிர்வாகிகள், தொண்டர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

பாமக நிறுவனர் ராமதாஸ், செயல் தலைவர் அன்புமணி ஆகியோர் இடையே கட்சியை யார் உரிமை கொண்டாடுவது என கடுமையான போட்டி நிலவுகிறது. தந்தை, மகன் இருவரும் மாறிமாறி போட்டி நிர்வாகிகள் கூட்டங்களை நடத்தி நிர்வாகிகள் நீக்கம், நியமனம் என போட்டா போட்டி அரசியல் செய்து வருகின்றனர். அதே நேரத்தில் தினமும் தைலாபுரம் தோட்டத்தில் முக்கிய நிர்வாகிகள் ராமதாஸை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார். வழக்கம்போல் நேற்றும் ஏராளமானோர் பாமக நிறுவனர் ராமதாசை சந்திக்க தைலாபுரம் தோட்டத்துக்கு வருகை தந்தனர். வன்னியர் சங்க மாநில தலைவர் பு.தா.அருள்மொழி, வன்னியர் சங்க மாநில மகளிர் அணி தலைவர் வழக்கறிஞர் சுஜாதா, வன்னியர் சங்க மாநில மகளிர் அணி செயலாளர் தானையம்மா, பாமக மாநில துணை தலைவர் காசிநாதன், செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர், வேலூர் மேற்கு மாவட்டத்தில் இருந்து 10க்கும் மேற்பட்டோர் ராமதாசை சந்தித்தனர். செங்கல்பட்டு, வேலூர், கடலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் ராமதாஸ் சிறிதுநேரம் ஆலோசனை நடத்தினார்.

நேற்று முன்தினம் வரை பாமகவில் 27 மாவட்ட செயலாளர்கள், 6 மாவட்ட தலைவர்கள் மாற்றம் செய்யப்பட்டிருந்தனர். நேற்றும் பாமகவில் நிர்வாகிகள் நியமனம் மற்றும் மாற்றம் தொடர்ந்தது. அதன்படி திருநெல்வேலி மேற்கு மாவட்ட செயலாளர் முத்துசரவணன் நீக்கம் செய்யப்பட்டு புதிய செயலாளராக சீயோன் தங்கராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி தெற்கு மாவட்ட செயலாளராக சுரேஷ், திருநெல்வேலி தெற்கு மாவட்ட தலைவராக முத்துராமலிங்கம், மேற்கு மாவட்ட தலைவராக மகாராஜன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சேலம் வடக்கு மாவட்ட செயலாளராக இருந்த நாராயணன் நீக்கப்பட்டு செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாவட்ட தலைவராக இருந்த சிவராமன் மாற்றப்பட்டு லட்சுமணனும், சேலம் தெற்கு மாவட்ட தலைவர் முத்துசாமிக்கு பதிலாக தொப்பகவுண்டரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். இதுதவிர சேலம் கிழக்கு மாவட்ட செயலாளராக இருந்த ஜெயப்பிரகாஷ் நீக்கப்பட்டு நடராஜன் நியமிக்கப்பட்டார். இதேபோல் ராணிப்பேட்டை கிழக்கு மாவட்டத்தில் 10 ஒன்றிய செயலாளர்கள் மற்றும் தலைவர்கள், ஒரு நகர செயலாளர்கள், 3 பேரூர் செயலாளர்களையும் அதிரடியாக மாற்றம் செய்து ராமதாஸ் உத்தரவிட்டுள்ளார். மொத்தம் இதுவரை 31மாவட்ட செயலாளர்கள், 9 மாவட்ட தலைவர்களை ராமதாஸ் மாற்றி உள்ளார்.

இந்நிலையில், மாவட்ட தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் மாற்றத்தை தொடர்ந்து பல்வேறு அணிகளில் உள்ள நிர்வாகிகளையும் கூண்டோடு மாற்றுவதற்கான முயற்சியில் ராமதாஸ் ஈடுபட்டு வருவதாகவும், இதற்காக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் கோபு தலைமையில் 20க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ராமதாஸை சந்தித்து ஆலோசனை நடத்தியதாகவும் தகவல் வெளியாகி வருகின்றன.

நிர்வாகிகள் மாற்றத்திற்கு பின்பு நிறுவனர் ராமதாஸ் தலைமையில் தனியாக மாநில பொதுக்குழு நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற உள்ளதாகவும் பாமகவட்டாரத்தில் கூறப்படுகிறது. இதனிடையே அன்புமணி கட்சியில் இருந்து நீக்கப்படுவாரா?, பாமக பொதுக்குழு எப்போது கூட்டப்படும் என்பதற்கு இன்று (வியாழக்கிழமை) பதில் அளிப்பதாக கூறியிருந்தார். இதனால் ராமதாஸ் தோட்டத்தில் இன்றைய செய்தியாளர்கள் சந்திப்பின்போது முக்கிய முடிவுகளை அறிவிப்பார் என பாமக நிர்வாகிகள், தொண்டர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

### 14 ஆண்டுகளுக்கு பின் ராமதாசுடன் த.வா.க. திருமால்வளவன் சந்திப்பு பாமகவுடன் இணைப்பா?

தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாசை நேற்று மாலை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவன தலைவரும், எம்எல்ஏவுமான வேல்முருகனின் சகோதரரும் அக்கட்சியின் மாநில ஒழுங்கு குழு நடவடிக்கை தலைவருமான திருமால்வளவன் நேற்று சந்தித்து பேசினார். சுமார் ஒரு மணிநேரம் இந்த சந்திப்பு நடந்தது. அப்போது வன்னியர் சங்க மாநில தலைவர் பு.தா.அருள்மொழி உடனிருந்தார். பின்னர் திருமால்வளவன் நிருபர்களிடம் கூறுகையில், "அரசியலை கடந்து ராமதாஸ் என்ற மாபெரும் போராளி, தமிழினப் போராளி, சமூக நீதிக்காக சமரசமின்றி போராடி வருகிறார். அரசியல் பாதை தடத்தை பின்பற்றி அரசியல் பல்வேறு கட்ட பரிணாமத்தில் போராடி வரும் ராமதாசை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். அரசியலில் உள்நோக்கம் இல்லை. பிரிந்திருக்கிற நாங்கள் மனமகிழ்வை தர வேண்டும் என்பதால் வந்தேன். நான் வந்தது அன்புமணிக்கு பிடிக்காது. அதனாலே உடனடியாக ராமதாசை சந்திக்க அன்புமணி வருவார்' என்றார். பாமகவில் தந்தை-மகன் மோதல் வெடித்து உள்ள நிலையில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு ராமதாஸ்-திருமால்வளவன் சந்தித்து உள்ளது அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்தாக கருதப்படுகிறது.

### முகுந்தன் திடீர் ஆலோசனை

ராமதாஸ்- அன்புமணி இடையே மோதல் ஏற்பட்டதை தொடர்ந்து, பாமக இளைஞரணி சங்கத் தலைராக நியமிக்கப்பட்ட முகுந்தன், தனது பதவியை ராஜினாமா செய்தார். கடந்த 5 நாட்களாக தைலாபுரம் தோட்டத்திற்கு வராமல் இருந்த முகுந்தன் நேற்று ராமதாசை சந்தித்து தன் பதவி விலகல் சம்பந்தமான முழு விபரங்களை அளித்தார். பின்னர் ராமதாஸ் அவரிடம் ஒருமணி நேரம் ஆலோசனையில் ஈடுபட்டார்.

### ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது

# அரசு பேருந்துகளில் 'தமிழ்நாடு' 2012ம் ஆண்டே நீக்கப்பட்டுவிட்டது

### அமைச்சர் சிவசங்கர் விளக்கம்

**அரியலூர், ஜூன் 5:** ஜெயலலிதா முதல மைச்சராக இருந்த போது அரசு பேருந்துகளில் 'தமிழ்நாடு' என்ற வார்த்தை 2012ம் ஆண்டே நீக்கப்பட்டுவிட்டது என்று அமைச்சர் சிவசங்கர் விளக்கம் அளித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் செந்துறை பகுதிகளில் ரூ.4 கோடி மதிப்பிலான பல்வேறு அடிப்படை வசதிகள் துவக்க நிகழ்ச்சியில் நேற்று கலந்து கொண்ட போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் தமிழ்நாடு என்ற பெயர் நீக்கப்பட்டுள்ளதாக சமீப காலமாக ஒரு சர்ச்சை பரப்பப்பட்டு வருகிறது. 2012ம் ஆண்டு ஜெயலலிதா முதல மைச்சராக இருந்த போது, தமிழ்நாடு என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் அரசு போக்குவரத்து கழகம், திருநெல்வேலி என்று தற்போது உள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கும்பகோணம் என்று எழுதினால் மிகவும் நீண்டதாக உள்ளது என்று அதிமுக ஆட்சி காலத்தில் மாற்றப்பட்டுள்ளது.

இது மாற்றப்பட்டு கிட்டத்தட்ட 13 வருடங்கள் ஆன நிலையில் ஏதோ புதிய செய்தி போல சிலர் சர்ச்சையை கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் பேருந்து பழைய பேருந்தாக உள்ளது என்றார்கள்.

ஆனால் முதல்வர் புதிய பேருந்துகளை அதிகம் வாங்கி பழைய பேருந்து மாற்றப்பட்டு உள்ளது.

இன்னும் புதிய பேருந்துகள் வர உள்ளது. அதேபோல அதிமுக ஆட்சி காலத்தில் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் எல்லாம், மீண்டும் போக்குவரத்து சேவை வழங்கப்பட்டுள்ளது. புதிய வழித்தடங்கள், பல இடங்களில் வழித்தடங்கள் நீட்டிப்பு செய்யப்பட்டு உள்ளது. இப்படி எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிட்ட பிறகு எதை குற்றம் சாட்டுவது என்று தெரியாமல், திடீர் என்று தமிழ்நாடு இல்லை என்று குற்றத்தை கண்டுபிடித்து உள்ளனர். மெட்ராஸ் மாகாணம் என்று இருந்த பெயரை தமிழ்நாடு என்று மாற்றிய அண்ணாவின் பிள்ளைகள் நாங்கள்.

எனவே எங்களுக்கு பாடம் நடத்த வேண்டாம். அதிமுக ஆட்சியில் மாற்றப்பட்டது.

ஒரு ஆட்சியில் ஒன்று நடந்தால், அடுத்த ஆட்சி வந்தவுடன் மாற்றப்பட்டு விடுகிறது என்று குற்றம்சாட்டுகிறார்கள் என்பதால்தான் அந்த பெயர் மாற்றப்படாமல் அப்படியே விட்டுவிட்டோம். இன்னொருபுறம் இந்த பெயர் எளிதாக உள்ளது என்று போக்குவரத்து பணியாளர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே அப்படியே பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 40 | மே.பொ/கொக்தி/வ.செ.அ.மி.நி-2 | 62inch Grinding Rolls and compaible Bull ring segments of XRP 1043 Bowl Mill |
| 538 | மே.பொ/கொக்தி/வ.செ.அ.மி.நி-1 | Cast Basalt lined MS pipes 406 mm OD with standard length of 6 m with Single end flanged end |
| 4290-M | மே.பொ/கொக்தி/தூ.அ.மி.நி | Supply of HT Aluminium armoured HT power cables |
| 26 | மே.பொ/இ-II/வ.செ.அ.மி.நி-1 | Unit I Overhaul 2025 26 Design BAH work carried out in A pass |
| 28 | மே.பொ/இ-II/வ.செ.அ.மி.நி-1 | Unit II Overhaul 2025 26 Design BAH work carried out in A pass |
| 24 | மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி-1 | அலகு 1 ID fan 1B casing மேல் பகுதியினை Fabrication Supply மற்றும் நிறுவுதல் பணியினை மேற்கொள்ளுதல் |
| 25 | மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி-1 | அலகு 1 FGD A Pass insulation பிரித்தெடுத்து மீண்டும் பொருத்தும் பணியினை 25 26 மேற்கொள்ளுதல் |
| 26 | மே.பொ/இ-I/வ.செ.அ.மி.நி-1 | அலகு 1 FGD B Pass insulation பிரித்தெடுத்து மீண்டும் பொருத்தும் பணியினை 25 26 மேற்கொள்ளுதல் |
| 37-S | த.பொ/மே.அ.மி.நி-II | மேட்டூர் அனல் மின் நிலையம்-II-ற்கு Nozzle Ring with Static Ring -2 Set வழங்குதல் |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணைய தளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / தேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/2824/ஒப்பந்தப்புள்ளி/2025

**கோயம்புத்தூர் மாநகராட்சி**
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். e32/2025 நாள் 03.06.2025
Development Charges and General Fund ( Two Cover System )

1. கோயம்புத்தூர் மாநகராட்சி, உக்கடம் பேருந்து நிலையம் நவீனமயமாக்கல் பணிக்கு Development Charges and General Fund ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன. பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.2,155.00 இலட்சம்.**
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து கொள்ளலாம்..
4. இப்பணிகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் பெறலாம்.
5. **இப்பணி சம்பந்தமான நாள் மற்றும் நேரம் :**
   1. ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம் : **23.06.2025 காலை 11.00 மணி**
   2. ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் : **08.07.2025 மாலை 3.00 மணி**
   3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : **08.07.2025 மாலை 3.00 மணி**
   4. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : **09.07.2025 மாலை 4.00 மணி**
6. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருப்பின் அதற்கு அடுத்த நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும். **ஆணையாளர், கோவை மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 641001. தொலைபேசி எண். 0422-2396026. Email: commr.coimbatore@tn.gov.in**

செ.ம.தொ.இ./2836/ஒப்பந்தப்புள்ளி/2025 **ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.**

### ஆற்காடு அருகே பயங்கரம்

# பாலியல் வன்கொடுமை செய்து மூதாட்டியை கொன்ற வாலிபர்

**ஆற்காடு, ஜூன் 5:** ஆற்காடு அருகே மாந்தோப்பில் தனியாக இருந்த மூதாட்டியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அடுத்த கீழ்விஷாரம் முந்திரிகாடு பகுதியை சேர்ந்தவர் தாண்டவராயன் மனைவி சுசிலா (80). தனது மாந்தோப்பில் உள்ள வீட்டில் மகன் சிவக்குமார் மற்றும் மருமகள் லோகலட்சுமியுடன் வசித்து வந்தார். சிவக்குமார் கொரோனா காலகட்டத்தில் உயிரிழந்தால், தனது மருமகளுடன் மாந்தோப்பில் செங்கல் சூளை நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சுசீலா மட்டும் வீட்டில் தனியாக இருந்து உள்ளார். அப்போது, ஆற்காடு அருகே உள்ள கத்தியவாடியை சேர்ந்த நந்தகுமார் (19) என்ற வாலிபர் மது மற்றும் கஞ்சா போதையில் அங்கு வந்துள்ளார்.

▶ சுசிலா, நந்தகுமார்.

பின்னர், தோப்பில் உள்ள வீட்டில் இருந்த சுசிலாவிடம் ரகளையில் ஈடுபட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சியடைந்த மூதாட்டி சுசிலா அலறி கூச்சலிட்டபடி தப்பியோடியுள்ளார். அப்போது தடுமாறி கீழே விழுந்துள்ளார். அப்போது மூதாட்டியை நந்தகுமார் தரதரவென இழுத்துச்சென்று பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டுள்ளார். இதில், மூதாட்டி சுசிலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உடனே நந்தகுமார் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

தகவலறிந்த ஆற்காடு டவுன் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்தனர். பின்னர், மூதாட்டியின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து மருமகள் லோகலட்சுமி கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிந்து நந்தகுமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கணவன், மனைவி என கூறி ஒன்றாக வாழ்ந்தனர்

# ஒரே தூக்கில் காதல் ஜோடி தற்கொலை

**ஓசூரில் பரபரப்பு**

**ஓசூர், ஜூன் 5:** கணவன், மனைவி என கூறி ஒன்றாக வாழ்ந்த காதல் ஜோடி ஒரே தூக்கில் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியை சேர்ந்தவர் தினேஷ் (23). இவர் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஒப்பந்த ஊழியராக பணியாற்றி வந்தார். இதே போல், திருவண்ணாமலை மாவட்டம், செங்கத்தை சேர்ந்த பவானி (22), ஓசூரில் உள்ள மற்றொரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இவர்கள் இருவரும் கடந்த ஓராண்டாக காதலித்து வந்தனர். இவர்கள் ஓசூர் முக்கண்டப்பள்ளி பகுதியில், தங்களை கணவன், மனைவி எனக்கூறி, வீடு வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு, அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதனால், பவானி கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து, தினேஷ் பவானியின் செல்போனுக்கு தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது, தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக கூறிவிட்டு, இணைப்பை தினேஷ் துண்டித்து விட்டார். இதனை கேட்டு அதிர்ச்சியடைந்த பவானி, மீண்டும் அவரை தொடர்பு கொள்ள முயன்றபோது முடியவில்லை. இதனால், உடனடியாக அவர் வீட்டுக்கு விரைந்து சென்றார். அங்கு தினேஷ் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவரது உடலை பார்த்து பவானி கதறி அழுதார். பின்னர், காதலனை பிரிந்த துக்கம் தாளாமல், தானும் தற்கொலை செய்து கொள்ள முடிவு எடுத்தார். அதன்படி, தனது நண்பர்களுக்கு போன் செய்து, நடந்த விபரங்களை அவர்களிடம் கூறினார். அதன் பிறகு, அவரும் அங்கேயே தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து ஓசூர் சிப்காட் போலீசார், வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கடன் தொல்லை 2வது மனைவியுடன் முதியவர் தற்கொலை

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தை சேர்ந்தவர் பாஸ்கரன் (61). பொக்லைன் வாகனங்களை வாடகைக்கு விடும் தொழில் செய்து வந்துள்ளார். இவருக்கு ஏற்கனவே மனைவி உள்ள நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த கவிதாமணியை (51), இரண்டாவதாக பதிவுத்திருமணம் செய்துள்ளார். பாஸ்கரன் உடல் நலக்குறைவு காரணமாக, மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இதற்காக அப்பகுதியில் உள்ள விடுதியில் 2வது மனைவியுடன் தங்கி, தினமும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். நேற்று காலை காபி கொடுப்பதற்காக தனியார் விடுதி ஊழியர் சென்று அறைக்கதவை தட்டியுள்ளார். அறைக்கதவு திறக்காததால் சந்தேகமடைந்து போலீசுக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் வந்து கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, பாஸ்கரன், கவிதாமணி இருவரும் விஷம் குடித்து தற்கொலை செய்தது தெரியவந்தது. அங்கிருந்த ஒரு கடிதத்தை போலீசார் கைப்பற்றினர். இதுகுறித்து போலீசார் கூறுகையில், 'தொழில்ரீதியாக அவருக்கு நிறைய கடன் இருந்துள்ளது. மதுரைக்கு வந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடன்காரர்கள் தினசரி கடனைக் கேட்டு நச்சரித்துள்ளனர். இதனால், விரக்தியடைந்த பாஸ்கரன், கவிதாமணியுடன் விஷம் குடித்து தற்கொலை செய்துள்ளார்' என்றனர்.

**JM FINANCIAL**
**JM ஃபைனான்சியல் அசெட் ரீகன்ஸ்டிரக்சன் கம்பெனி லிமிடெட்**
பெருநிறுவன அடையாள எண் (CIN): U67190MH2007PLC74287
பதிவு அலுவலகம்: 7,ஆவது தளம், சினெர்ஜி, அப்பாசாஹெப் மராத்தே மார்க், பிரபாதேவி, மும்பை 400025.
தொலைபேசி: +91 22 6630 3030 | ஃபேக்ஸ்: +911 22 6630 3223 | இணையத்தளம்: www.jmfinancialarc.com
தொடர்பு நபர்: 1. விஜய் தேவ்ராஜ் – 9843833009, 2. ரோஹன் சவந்த் 9833143013 3. சிந்துஜா பிள்ளை 022 6224 1676

**மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு - புதிய விற்பனை**

நிறுவனமானது கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") பிரிவு 5 (1) (ம்)–இன் கீழும் மார்ச் 29, 2023 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படியும் ("ஒப்படைப்பு ஒப்பந்தம்") கடன் தொகுப்பு ஒன்றினை (கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் உட்பட) அதன் பேரிலான கடனீட்டுச் சொத்துடனும் அதன் அனைத்து உரிமைகள், உடைமைகள், பாத்தியதைகள் ஆகியவற்றுடனும் சேர்த்து JMFARC–ஆரண்யா–டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் JMFARC (JM) (இனி ஒப்படைப்புதார நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது. PCHFL நிறுவனமானது சேவை வழங்குநர் / வரூல் முகவர் எனும் முறையில் அனைத்துச் செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஒப்படைப்பின்படி / சேவை ஒப்பந்தத்தின்படி அதிகாரம் அளித்து அமர்த்தியுள்ளது என்பதை இதன் மூலம் அறிய வேண்டுகிறோம்.
ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தினை **சர்ஃபாசி சட்டம் 2002**–இன் கீழ் கவாதீனம் செய்துள்ளதை அடுத்துக் கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு கவாதீனத்தில் இருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை **'உள்ளது உள்ள இடத்தில்', 'உள்ளது உள்ளபடி', 'உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்'** எனும் முறையில் வாங்கிக் கொள்ளக் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் விலைகோரல்கள் வரவேற்கப்படுகின்றன. இதன் விவரங்கள் பின்வருமாறு:

| கடன் குறியீடு/ கிளை/ கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை | சொத்து முகவரி_இறுதியானது | நிர்ணய விலை | முன்வைப்புத் தொகை (EMD) (நிர்ணய விலையின் 10%) | நிலுவைத் தொகை (30.05.2025) |
|---|---|---|---|---|---|
| கடன் குறியீடு எண் : 11700002426, வேலூர் (கிளை), சத்யா G (கடன்தாரர்), குணா V (உப கடன்தாரர் 1) | தேதி : 14.06.2021 – ரூ.1340739/– (ரூபாய் பதின்மூன்று லட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தொன்பது மட்டும்) | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு: மனை எண் 32, 3ஆவது குறுக்குத் தெரு குமரன் நகர், புத்தேரி கிராமம், புத்தேரி கிராமம், காஞ்சிபுரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு – 631502. எல்லைகள்: வடக்கு: மனை எண் 31, தெற்கு: மனை எண் 33, கிழக்கு: மனை எண் 21, மேற்கு: 24 அடி அகலமுள்ள 3ஆவது குறுக்குத் தெரு. | ரூ.1980000/– (ரூபாய் பத்தொன்பது லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) | ரூ.198000/– (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) | ரூ.2300478/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து நானூற்று எழுபத்தெட்டு மட்டும்) |
| கடன் குறியீடு எண் : 12800004385, சென்னை – போரூர் (கிளை), உமா மகேஸ்வரி M (கடன்தாரர்), மரியா தாஸ் S (உப கடன்தாரர் 1) | தேதி : 19.11.2019 – ரூ.894009/– (ரூபாய் எட்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஒன்பது மட்டும்) | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு: மனை எண் 58 B, இந்திரா'ஸ் S S அவென்யூ, புதுச்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு – 601301. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 58A, தெற்கு: மனை எண் 57, கிழக்கு: மனை எண் 64, மேற்கு: 30 அடி அகலமுள்ள சாலை. | ரூ.816480/– (ரூபாய் எட்டு லட்சத்து பதினாறாயிரத்து நானூற்று எண்பது மட்டும்) | ரூ.81648/– (ரூபாய் எண்பத்தோராயிரத்து அறுநூற்று நாற்பத்தெட்டு மட்டும்) | ரூ.1898116/– (ரூபாய் பதினெட்டு லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று பதினாறு மட்டும்) |
| கடன் குறியீடு எண் : 28100000667, திருவள்ளூர் (கிளை), பழனி K (கடன்தாரர்), கீதா பழனி (உப கடன்தாரர் 1) | தேதி : 19.11.2019 – ரூ.822204/– (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து இருநூற்று நான்கு மட்டும்) | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு: பிளாட் எண் 2F2, 2ஆவது தளம், பிளாக் 1, பிளாசம் கட்டம் I, மனை எண் 79, அய்யா நகர், கூடலூர் கிராமம், மறைமலை நகர், செங்கல்பட்டு எம்ஜிஆர், தமிழ்நாடு – 603209. எல்லைகள்: வடக்கு: காலி நிலம், தெற்கு: 23 அடிச் சாலை, கிழக்கு: காலி நிலம், மேற்கு: அய்யா நகர் 40 அடி பிரதான சாலை. | ரூ.1197690/– (ரூபாய் பதினொரு லட்சத்து தொண்ணூற்று எழாயிரத்து அறுநூற்று தொண்ணூறு மட்டும்) | ரூ.119769/– (ரூபாய் ஒரு லட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூற்று அறுபத் தொன்பது மட்டும்) | ரூ.1651614/– (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பத் தோராயிரத்து அறுநூற்று பதினான்கு மட்டும்) |
| கடன் குறியீடு எண் : 28000000133, சென்னை – நங்கநல்லூர் (கிளை), சரவணன் D (கடன்தாரர்), செந்தமிழ் செல்வி S (உப கடன்தாரர் 1) | தேதி : 20.07.2021 – ரூ.1611582/– (ரூபாய் பதினாறு லட்சத்து பதினொராயிரத்து ஐந்நூற்று எண்பத்திரண்டு மட்டும்) | அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட சொத்து. பரப்பளவு: மனை எண் 4, பிளாட் எண் B2, 1ஆவது தளம், பிளாக் B மெர்குரி ஊராட்சி பிரதான சாலை, ராஜேந்திரா நகர், செட்டிபுண்ணியம், சென்னை, காஞ்சிபுரம், தமிழ்நாடு 603204. எல்லைகள்: வடக்கு: ஊராட்சி பிரதான சாலை, தெற்கு: சர்வே எண் 428 / 1A–இல் உள்ள காலி நிலம், கிழக்கு: மனை எண் 28, மேற்கு: மனை எண் 3. | ரூ